காரைதீவு பிரதேச சபை
அம்பாரை மாவட்டம்

1. நிதிக்கூற்றுகள்

1.1 நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

2017 ஆம் ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 மார்ச் 29 ஆந் திகதி கணக்காய்விற்காகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன், அந்நிதிக்கூற்றுக்ளிற்கான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2018 ஒக்டோபர் 19 ஆந் திகதி தவிசாளருக்கு அனுப்பிவைக்கப்பட்டது.

1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையில் 1.3 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட தாக்கத்தினைத் தவிர்த்து காரைதீவு பிரதேச சபையின் 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

1.3 நிதிக்கூற்றுக்களின் மீதான கருத்துரைகள்

1.3.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் கணக்கீட்டுக் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

(அ) சபையின் அலுவலகம் மற்றும் நூலகம் என்பவை அமைந்துள்ள சபைக்குச் சொந்தமான காணிகளின் பெறுமதி மதிப்பிடப்பட்டு கணக்குகளுக்கு கொண்டுவரப்பட்டிருக்கவில்லை.

(ஆ) சபையின் ரூபா 5,400,000 கிரயமான மோட்டார் லொறி 2012 ஆம் ஆண்டில் விபத்துக்குள்ளாகி முற்றாக சேதமுற்று அதற்காக இழப்பீடு பெறப்பட்டிருந்த போதிலும் கணக்குகளில் இவ்வாகனத்தின் கிரயமானது பதிவழிக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) 2009 ஆம் ஆண்டு யுனப்ஸ் நிறுவனத்தினால் சபைக்கு வழங்கப்பட்டிருந்த 02 கல் அமுக்கி (Road Roller) இயந்திரங்களின் பெறுமதி மதிப்பிடப்பட்டு கணக்குகளுக்கு கொண்டுவரப்பபட்டிருக்கவில்லை.

1.3.2 பெறப்படவேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டிருந்தன.

(அ) பிடித்துவைத்தல் வரி மற்றும் தேசத்தை கட்டியெழுப்புதல் வரி ரூபா 281,463 தொகை 07 வருடத்திற்கு மேலாக உள்நாட்டு இறைவரித் திணைக்களத்திற்கு அனுப்பப்படாமல் வைப்புக் கணக்குகளில் தொடர்ச்சியாக காட்டப்பட்டுவருகிறது.

(ஆ) இடமாற்றம் பெற்றுச் சென்ற 06 உத்தியோகத்தர்களிடமிருந்து அறவிடவேண்டிய ரூபா 39,897 கடன் மீதி 11 ஆண்டுகளுக்கு மேலாக நிலுவையாக காணப்பட்ட போதிலும் அவற்றை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படாது தொடர்ச்சியாக நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டு வருகின்றது.

1.3.3 ஆவணச் சான்றுகள் இன்மை

சபையினால் சமர்ப்பிக்கப்பட்ட 2017 ஆம் ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்ட நிலையான சொத்துக்கள் தொடர்பாக 2007 ஆம் ஆண்டின் படியான கணக்கு மீதிகளாக முன்கொண்டு வரப்பட்டிருந்த ரூபா 9,026,950 கூட்டு மொத்தத் தொகையான 05 விடயங்கள் தொடர்பில் விபரமான ஆவணங்கள் கணக்காய்வுக்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

1.3.4 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றுடனான இணக்கமின்மை

கீழே காட்டப்பட்டுள்ள சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றுடனான இணக்கமின்மைச் சந்தர்ப்பங்கள் கணக்காய்வின்போது அவதானிக்கப்பட்டன.

| சட்டங்கள் விதிகள் பிரமாணங்கள் என்பவற்றுக்கான தொடர்பு | தொகை<br>ரூபா | இணங்காமை |
|---|---|---|
| (அ) 1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் அதிகாரச் சட்டத்தின் 12(1) மற்றும் (2) ஆம் பிரிவுகள் | - | பிரதேச சபைகளின் நடவடிக்கைகளை இலகுபடுத்தும் நோக்குடன் நிறைவான தீர்மானங்களை பெற்றுக்கொள்வதற்காகவும் சபையில் நிதி மற்றும் கொள்கைத் திட்டமிடல், வீடமைப்பு மற்றும் சமூக அபிவிருத்தி, தொழிநுட்பச் சேவைகள், சுற்றாடல் மற்றும் பொது வசதிகள் போன்ற விடயங்களுக்காக தனித்தனி குழுக்கள் சபையால் நியமித்து செயற்படுத்துவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ஆ) 1988ம் ஆண்டின் பிரதேச சபைகள் நிதி, நிருவாக விதியின் அத்தியாயம் I இன் பிரிவு 5(XII) | - | பணம், களஞ்சியப்பொருட்கள் மற்றும் காசோலைகளில் கையொப்பம் இடல் என்பவை மூன்று உத்தியோகத்தர்களுக்கு நிர்வாக ரீதியாக ஒப்படைக்கப்பட்டிருந்த போதிலும், மூன்று வருடங்களுக்கு மேலாக அவர்களிடமிருந்து பாதுகாப்பு பிணை பெறப்பட்டிருக்கவில்லை. |
| (இ) இலங்கை சனநாயக சோஷலிசக் குடியரசின் நிதிப்பிரமாணம் 571 | 1,781,197 | ஏழு வைப்புகள் இரண்டு ஆண்டுகளிற்கு மேற்பட்ட காலங்கடந்த வைப்புக்களாக காணப்பட்ட போதிலும் சபையினால் உரிய நபர்களிற்கு திருப்பிக் கொடுக்கவோ அல்லது வருமானக் கணக்கிற்கு மாற்றுவதற்கோ நடவடிக்கை எடுக்கவில்லை. |

2. நிதி மீளாய்வு

2.1 நிதி விளைவுகள்

சமர்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின்படி 2017 திசெம்பர் 31 ஆம் திகதியுடன் முடிவடைந்த ஆண்டிற்கான வருமானத்திலும் கூடிய மீண்டுவரும் செலவினம் ரூபா 1,443,891 ஆகும். இதற்கு எதிராக முன்னைய ஆண்டிற்கான மீண்டுவரும் செலவிலும் கூடிய வருமானம் ரூபா 2,458,867 ஆக இருந்தமை நிதி விளைவுகளில் ரூபா 3,902,758 பின்னடைவைக் காட்டுகின்றது.

2.2 வருமான நிர்வாகம்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன

2.2.1 மதிப்பிடப்பட்ட வருமானம் உள்ளபடியான வருமானம் மற்றும் வருமான நிலுவைகள்

சமர்ப்பிக்கப்பட்ட தகவல்களின் பிரகாரம் மீளாய்வாண்டிற்கான மற்றும் முன்னைய ஆண்டிற்கான மதிப்பிடப்பட்ட வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம், அறவிடப்பட்ட வருமானம் மற்றும் வருமான நிலுவைகள் தொடர்பான தகவல்கள் கீழே தரப்படுகின்றன.

| வருமான விடயம் | 2017 | | | | 2016 | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | மதிப்பிடப் பட்ட வருமானம் | பட்டியலிடப் பட்ட வருமானம் | அறவிடப் பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் திரண்ட நிலுவை | மதிப்பிடப் பட்ட வருமானம் | பட்டியலிடப் பட்ட வருமானம் | அறவிடப் பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் திரண்ட நிலுவை |
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| வீதவரிகளும் வரிகளும் | 25,000 | -- | -- | -- | 15,000 | 20,000 | 20,000 | -- |
| வாடகை | 2,550,000 | 2,880,096 | 2,901,026 | 652,725 | 2,050,000 | 2,882,523 | 3,022,523 | 673,655 |
| உரிமைக் கட்டணம் | 2,558,000 | 1,094,903 | 1,089,334 | 3,737,696 | 2,903,000 | 1,047,556 | 1,255,849 | 3,732,127 |
| ஏனைய வருமானம் | 5,560,000 | 2,649,033 | 2,649,033 | -- | 5,288,000 | 6,566,810 | 6,411,116 | 285,694 |

2.2.2 வருமான சேகரிப்பு செயலாற்றல்

2017 திசெம்பர் 31 ஆம் திகதி வரை சபையினால் அறவிடப்படவேண்டிய வருமானம் ரூபா 11,029,814 தொகையில் மீளாய்வாண்டில் ரூபா 6,639,393 தொகை அறவிடப்பட்டிருந்தது. இதன்படி வருமான சேகரிப்பு வீதமானது 60% ஆக காணப்பட்டிருந்தது.

2.2.3 வீதவரிகள் மற்றும் வரிகள்

1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் அதிகாரச் சட்டத்தின் 134 ஆம் பிரிவுக்கு அமைய, பிரதேச சபையின் அதிகாரத்திற்குட்பட்ட பிரதேசங்களிலுள்ள 350 வர்த்தக நிலையங்கள் மற்றும் 5,660 வீடுகள் மீது 2003 ஆம் ஆண்டு தொடக்கம் வீதவரிகள் கணிப்பீடு செய்யப்பட்டு அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படாமையினால் வருடாந்தம் அண்ணளவாக ரூபா 3,000,000 தொகையான வருமானம் இழக்கப்படுகின்றது.

2.2.4 வாடகை வருமானம்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) 1992 முதல் 2012 ஆம் ஆண்டு வரை நிலுவையாக உள்ள இறைச்சிக் கடைக் குத்தகைப் பணமாகிய ரூபா 459,964 தொகையை மீளாய்வாண்டின் இறுதிவரை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(அ) சம்மாந்துறை பிரதேச சபை, நிந்தவூர் பிரதேச சபை மற்றும் கல்முனை மாநகர சபைகளினால் கொண்டுவரப்படும் குப்பைகளை காரைதீவு பிரதேச சபையின் எல்லைக்குள் குவித்து இடமாற்றம் செய்வதற்காக குறித்த தரப்பினர்களால் இணங்கிக் கொண்டவாறு அறவிடவேண்டிய கட்டணம் ரூபா 3,732,127 தொகையை அறவிடுவதற்கு மூன்று ஆண்டுகளாக மேலாக நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

2.2.5 உரிமைக்கட்டண அறவீடு

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) சபையினால் வருமானங்களை அறவிடுவதற்காக உபவிதிகளை சட்டமாக்குவதிலுள்ள தாமதத்தின் காரணமாக 85 விளம்பரப் பதாதைகளுக்காக அறவிடப்படவேண்டிய உரிமைக்கட்டணத்தை வருடாந்தம் அறவிட முடியாமையால் சபையானது வருடாந்தம் ரூபா 95,000 பெறுமதியான வருமானத்தை இழந்துள்ளது.

(ஆ) 02 தொலைத் தொடர்பு கோபுரங்களுக்கான உரிமைக்கட்டணம் ரூபா.255,000 தொகையினை அறவிட நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவிலை.

3. செயற்பாட்டு மீளாய்வு

3.1 செயலாற்றுகை

3.1.1 நிலைபேறான அபிவிருத்தி இலக்கு (SDG)

2017 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, இலங்கை நிலைபெறுதகு அபிவிருத்திச் சட்டத்தின்படி 2030 ஆம் ஆண்டிற்கான ஐக்கிய நாடுகள் சபையின் நிலைபேறான அபிவிருத்தி நிகழ்ச்சி நிரலுடன் இணங்குமாறு ஒவ்வொரு பொது நிறுவனமும் செயற்பட வேண்டும். இருப்பினும் இது தொடர்பிலான இலக்குகளை அடையாளம் கண்டு அதனை அடைவதற்கு சபையினால் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

3.2 முகாமைத்துவப் பலவீனங்கள்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) காரைதீவு பொதுச் சந்தை கட்டிடம் மற்றும் சபையின் திண்மக்கழிவு இடமாற்ற நிலையம் அமைந்துள்ள காணிகளின் உரிமையினை சபையின் பெயருக்கு மாற்றிக்கொள்ள நடவடிக்கைகளை எடுத்திருக்கவில்லை.

(ஆ) சபையின் மோட்டார் லொறி 2012 ஆம் ஆண்டில் விபத்துக்குள்ளாகி முற்றாக சேதமுற்றமை தொடர்பில் காப்புறுதி நிறுவனத்தினால் ரூபா 1,400,000 தொகையை இழப்பீடாகச் செலுத்த உடன்பட்டிருந்த போதிலும் 2014 ஆம் ஆண்டில் ரூபா 1,000,000 மாத்திரம் சபைக்குச் செலுத்தியிருந்தது. இருப்பினும், காப்புறுதி நிறுவனத்திடம் குறித்த வாகனத்தை ஒப்படைத்து மீகுதித் தொகை ரூபா 400,000 இனை அறவிடவோ அல்லது குறித்த வாகனத்தை ஏலத்தில் விற்பதற்கோ சபை நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

(இ) 2010 ஆம் ஆண்டு தொடக்கம் 2016 ஆம் ஆண்டு இறுதிவரை கட்டிட ஒப்பந்தங்கள் மூலம் 02 ஒப்பந்தக்காரருக்கு செலுத்தப்பட்ட "பெறுமதி சேர்க்கப்பட்ட வரி" ரூபா 3,400,500 தொகை தொடர்பாக உள்நாட்டு இறைவரி திணைக்களத்திற்கு சபையால் அறிவிக்கப்பட்டிருக்கவில்லை.

3.3 மனிதவள முகாமைத்துவம்

180 நாட்கள் திருப்திகரமான சேவைக்காலத்தினை பூர்த்தி செய்துள்ள நிரந்தர நியமனம் பெற்ற வேலைத் தொழிலாளி 08 பேர் தங்களது வினைத்திறன் தடைதாண்டல் பரீட்சையினை 2017 செப்தெம்பர் 09ஆந் திகதி நிறைவு செய்துள்ள போதிலும் அவர்களது சேவையினை உறுதிப்படுத்தல் மற்றும் அவர்களின் மூன்றாவது சம்பள ஏற்றம் வழங்குதல் என்பன 2018 மே 10 ஆந் திகதி வரை சபையினால் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

3.4 செயற்பாட்டுச் செயற்றிறனின்மை

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) வடகிழக்கு கரையோர சமூக அபிவிருத்தி திட்டத்தின் (NECCDEP) நிதி உதவியின் கீழ் ரூபா 14,347,200 பெறுமதியில் நிர்மாணிக்கப்பட்டு பிரதேச சபைக்கு 2009 ஆம் ஆண்டு ஒப்படைக்கப்பட்ட பொதுச்சந்தைக் கடைத்தொகுதியில் 20 கடைகள் காணப்படுகின்ற போதிலும் 19 கடைகளும் நிர்மாணிக்கப்பட்ட திகதியிலிருந்து இன்றுவரை எந்த நோக்கத்திற்காகவும் பயன்படுத்தப்படாது 09 வருடங்களுக்கு மேலாக விளைவற்று காணப்படுகின்றன.

(ஆ) மீளாய்வாண்டில் சபையில் முன்னலுவலகம் ஸ்தாபிக்கப்பதற்காக மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு மற்றும் சபை என்பவற்றினால் ரூபா 300,000 நிதி ஒதுக்கீடு செய்யப்பட்ட போதிலும் 2018 செப்டம்பர் 10 ஆம் திகதிவரை முன்னலுவலகம் ஸ்தாபிக்கப்பட்டிருக்காததுடன் இதற்காக 2017 நவம்பர் 26 ஆம் திகதி கொள்வனவு செய்யப்பட்ட ரூபா 190,000 பெறுமதியான தளபாடங்கள் மற்றும் அலுவலக உபகாரணங்கள் பயன்படுத்தப்படாது காணப்பட்டன.

(இ) நூலக செயற்பாடுகளை அதிகரித்து வாசகர்களின் அறிவை பெருகச் செய்வதற்காக நூலக அபிவிருத்திக் குழு பிரதேச சபையினால் அமைக்கப்பட்டிருந்த போதிலும், அக்குழுவின் செயற்பாடுகள் மற்றும் கூட்ட ஒழுங்குகள் மீளாய்வாண்டில் ஒருதடவை மாத்திரம் இடம்பெற்றுள்ளது. மேலும் பொதுநூலகங்களுக்கான புத்தகங்கள் கொள்வனவு செய்வதற்காக ரூபா 300,000 தொகை ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்தும் ரூபா 13,486 பெறுமதியான புத்தகங்கள் மாத்திரமே கொள்வனவு செய்யப்பட்டிருந்தது.

3.5 கலாச்சார மண்டபத்திற்கான பிளாஸ்டிக் கதிரைகள் கொள்வனவு

மீளாய்வாண்டில் அவசர தேவை, காலம் போதாமை மற்றும் தவிர்க்க முடியாத சந்தர்ப்பங்கள் போன்ற காரணங்கள் இன்றி சபையின் கலாச்சார மண்டபத்திற்கு ரூபா 703,800 பெறுமதியான 600 பிளாஸ்டிக் கதிரைகள் நேரடியாக வரையறுக்கப்பட்ட இலங்கை அரச வர்த்தக கூட்டுத்தாபனத்திடமிருந்து கொள்வனவு செய்யப்பட்டிருந்தது. இதன்படி, தனியார் வியாபர்ர நிறுவனம் ஒன்றிடமிருந்து கிடைக்கப்பெற்ற தகவல்களின் படி பிளாஸ்டிக் கதிரை ஒன்றின் கொள்வனவு விலை ரூபா 1,100 தொகையாக காணப்பட்டிருந்தும் ரூபா 1,173 தொகைக்கு கொள்வனவு செய்துள்ளமையினால் சபையின் நிதியில் ரூபா 43,800 தொகையை மேலதிகமாக செலுத்தியுள்ளது.

4. முறைமைகளும் மற்றும் கட்டுப்பாடுகளும்

பின்வரும் ஒவ்வொரு கட்டுப்பாடுகளிற்கு எதிரே சுட்டிக்காட்டப்பட்டுள்ள விடயங்கள் மீது விசேட கவனம் செலுத்த வேண்டும்.

| கட்டுப்பாடுகள் | விசேட கவனம் செலுத்த வேண்டிய விடயங்கள் |
|---|---|
| (அ) நிலையான சொத்துக் கட்டுப்பாடு | i. நிலையான சொத்துப் பதிவேடு பேணப்படுதல்.<br>ii. சபையில் பயன்படுத்தப்படாது விளைவற்றுக் காணப்படும் நிலையான சொத்துக்களை பயன்படுத்த நடவடிக்கை எடுக்கப்படல். |
| (ஆ) வருமான அறவீட்டு முகாமைத்துவம் | வருமான நிலுவைகளை அறவிட நடவடிக்கைகள் எடுக்கப்படல். |
| (இ) திண்மக் கழிவு முகாமைத்துவம | திண்மக் கழிவுகளை தரப்படுத்தி சேகரித்தல் |
| (ஈ) பெறுகை நடைமுறை | பொருட்களின் விலையானது நியாயமானகாகவும் ஒப்பீட்டு அனுகூலம் உடையதாகவும் இருத்தல். |